# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 203/2024 நாள்.05.02.2026

## DW1- திருமதி. ஜீலியட் , க/பெ. திரு.ராஜன்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிநான்தான் சொன்னேன் என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதி எல்லாம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் ஆமாம். வழக்கில் ஏதாவது ஆவணம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. என்ன வழக்கு என்ற பரிகாரம் தெரியுமா என்றால் தெரியும் பாகபிரிவினை வழக்கு. ராஜாவுக்கு 2005இல் திருமணம் செய்து வைத்தேன் என்றால் ஆமாம். 2005இல் திருமணம் செய்து வைத்த விபரத்தை என்னுடை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் வருடம் சொல்லவில்லை திருமணமானதை மட்டும் சொல்லியுள்ளேன். எந்த வருடத்திலிருந்து பிரிந்து வாழ்கிறார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் பிரமாணவாக்குமூலத்தில் இவ்வழக்கின் வாதி குடும்பத்தினரை மதிக்காமல் தான்தோன்றிதனமாக வாழ்வந்து வருகிறார் என்று சொல்லியுள்ளது குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். வாதி மேற்கண்டதுபோல் இருந்து எனக்கு எதுவும் இழப்பீடு ஏற்படுத்தினார் என்று எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி குடும்ப சொத்துக்களை அடமானம் வைத்து செலவு செய்தார் என்றும், கடன் வாங்கினார் என்றும் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆவணங்கள் இல்லை. வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதற்கு லைசன்ஸ் வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வாதி ராஜாவிடம் லைசன்ஸ் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பல லட்சம் ரூபாய் வசூல் செய்து பணம் கொடுத்தவர்கள் திரும்ப கேட்டார்கள் என்பதற்கான ஆதாராம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை வாதியிடம்தான் உள்ளது. செங்கிபட்டி காவல்நிலையத்தில் எனது மகன் ராஜா பெயரில் புகார் யார் கொடுத்தார் எந்த தேதியில் கொடுக்கபட்டது என்ற விபரம் நிரூபண வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். ராஜா வாங்கிய கடனை அடைப்பதற்காக சொத்தை விற்று எந்த கடனையும் அடைக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் உயிருடன் இருக்கும்போது வாதி ராஜா தான்தோன்றிதனமாக சொத்துககளை அழித்து வந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அவ்வாறு எந்த சொத்தை அழித்தார் என்றும், எந்த புல எண் என்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் புலஎண் தெரியாது. சொத்துக்களை நேரடியாக விற்றார் என்று

சொல்லும் புல எண்ணும் தெரியாது என்றால் நடுக்காவேரி மற்றும் நடுப்படுகையில் உள்ள நிலத்தை வாதி ராஜாதான் எனக்கு தெரிந்துதான் விற்றார். அதேபோல் எந்த சொத்தும் அவர் தனிமுறையில் விற்கவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு சொத்து விற்றார் என்ற விபரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை நடுகாவேரி 7மா நிலம், நடுபடுகையில் 10 மா நிலத்தையும் விற்றார். அதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. தஞ்சாவூரில் உள்ள வீடு எப்போது வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது எழுதி வைத்தது 2006. தஞ்சாவூரில் உள்ள வீட்டில் யார் தற்போது குடியிருக்கிறார் என்றால் ராஜா குடியிருக்கிறார். ராஜா எத்தனை வருடமாக குடியிருக்கிறார் என்றால் 9 வருடமாக குடியிருக்கிறார். வாதிக்கு பாகம் கொடுத்தோமா என்றால் எல்லோருக்கும் பாகம் கொடுத்துவிட்டோம். எந்த வருடம் பாகம் கொடுத்தோம் என்றால் 2019. அதற்கு ஆவணம் எழுதபட்டதா என்றால் இல்லை. தாவா சொத்து எனது கணவரின் சுயசாம்பத்தியத்தில் வாங்கி கட்டபட்டதல்ல என்றும் பூர்விக வருவாயிலிருந்து வாங்கி கட்டபட்டது என்றால் சரியல்ல. தஞ்சாவூர் வீடு எல்லோருக்கும் பாகத்திற்குரியது என்று சொன்னால் சரியல்ல யாருக்கு எழுதி கொடுக்கபட்டதோ அவருக்குதான் சொந்தம். 3ஆம் பிரதிவாதி ஸ்ரீதர் என் மகனுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மதம் மாறியவர்கள் என்றால் பிள்ளைகளுக்கு அரசு வேலைகிடைப்பதற்காக மாறினோம். நாங்கள் இந்துக்கள் என்றும், எல்லோருக்கும் தாவா சொத்தில் பங்கு உண்டு என்றால் நாங்கள் கிறிஸ்துவர்கள்தான் இந்து அல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் கிறிஸ்துவர் என்று பொய்யாக போட்டுள்ளேன் என்றால் நான் ஞாயிற்றுகிழமை தேவாலயத்திற்கு போவேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.05 18:46:39 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.